SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

தேதி: 26.9.19 **முதல் பருவத்தேர்வு - 2019** மதிப்பெண்கள்: 60

வகுப்பு : 4 பாடம் : **தமிழ்** **கால அளவு :**

## விடைக்குறிப்புகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (20 )**

1. கலயத்தில் சோறுடன் விரைந்து சென்றவள் _________

அ. அறிவுமதி ஆ. இனியன் இ. அறிவுமதியின் அம்மா

2. கல்லணை எந்த மாவட்டத்தில் உள்ளது?

அ. கோவை ஆ. மதுரை இ. தஞ்சாவூர்

3. அமைத்துள்ளது - பிரித்து எழுதக் கிடைப்பது __________

அ. அமைந் + ள்ளது ஆ. அமைந்து + உள்ளது இ. அமைந் + உள்ளது.

4. ஆல் என்பதன் பொருள்

அ. வேப்பமரம் ஆ.ஆலமரம் இ. அரசமரம்

5. மன்னன் என்பதைக் குறிக்கும் வேறுசொல் ________

அ. அரசன் ஆ. போர் வீரன் இ. மைந்தன்

6. வெற்றி வேற்கை - நூலின் ஆசிரியர் _____

அ. ஔவையார் ஆ. அதிவீரராம பாண்டியன் இ. பாரதியார்

7. மணிமொழியும் கனிமொழியும் _________ வீட்டிற்குச் சென்றார்கள்.

அ. தாத்தா ஆ. மாமா இ. பெரியப்பா

8. சத்தம் என்பதைக் குறிப்பது ________

அ. ஒளி ஆ. ஒலி இ. ஒழி

9. உலகம் என்பதைக் குறிக்கும் வேறு சொல் __________

அ. தார் ஆ. பார் இ. நார்

10. புதுமை - என்பதன் எதிர்ச்சொல் ____________

அ. பழைமை ஆ. இனிமை இ. செம்மை

11. பனைமரத்தில் _____ வகைகள் உள்ளன.

அ. 40 ஆ.32 இ 50

12. உயர்திணைக்கு ஒரு எடுத்துக்காட்டு

அ. ஆசிரியர் ஆ. புறா இ. மான்

13. தையலர் என்பது யாரைக் குறிக்கும்?

அ, ஆண்கள் ஆ. முதியோர் இ. பெண்கள்

14. வெத்தலை என்பதன் எழுத்து வழக்குச் சொல் ____

அ. வெற்றிலை ஆ. வெத்துஇலை இ வெற்றுஇலை

15. காட்டின் புதிய அரசன் ___

அ. புலி ஆ. குரங்கு இ. முயல்

16.பல்லாண்டு - பிரிக்கக் கிடைப்பது ___

அ. பல் + ஆண்டு ஆ. பல + யாண்டு இ. பல+ ஆண்டு

17. பூ மலரும் முன்பு ___

அ. கரும்பு **ஆ. அரும்பு** இ. துரும்பு

18. என்னில் என்பதன் பொருள்___

**அ. எனக்குள்** ஆ. உனக்குள் இ. நமக்குள்

19. மாடு + எரு - சேர்த்து எழுதக் கிடைப்பது ____

அ. மாடுஎரு ஆ. மாடெரு **இ. மாட்டெரு**

20. மல்லிகை ____ வீசும்.

அ. மனம் ஆ. மறம் **இ. மணம்.**

**II. பின்வரும் வினாக்களுக்கு விடையளி:**

21. தமிழகத்தின் மரம் என அழைக்கப்படுவது எது?

**தமிழகத்தின் மரம் என அழைக்கப்படுவது பனை மரம்.**

22. விஜயநகரத்தை ஆண்ட மன்னர் யார்?

**விஜயநகரத்தை ஆண்ட மன்னர் கிருஷ்ணதேவராயர்.**

23. நவரசங்களுள் நான்கின் பெயரினை எழுதுக.

**1. அழுகை 2. சிரிப்பு 3. வியப்பு 4. கோபம்**

24. “ஆ நெய்” “பூ நெய் “ ஆகியன எவற்றைக் குறிக்கின்றன?

**“ஆ நெய்” - பசுவின் நெய் பூ நெய் - பூவில் ஊறும் தேன்.**

25. தோற்றுப்போன புலி என்ன செய்தது?

**தோற்றுப்போன புலி அந்தக் காட்டை விட்டு ஓடியது.**

26. ஆலமரத்தின் நிழலில் தங்கும் படைகள் யாவை?

**ஆலமரத்தின் நிழலில் தங்கும் படைகள்:**

**யானைப்படை குதிரைப்படை தேர்ப்படை காலாட் படை**

27. அழகிய மலைக் கிராமத்தின் பெயர் என்ன?

**அழகிய மலைக் கிராமத்தின் பெயர் மன்னவனூர்.**

28. கரிகாலன் பெயர்க்காரணம் தருக.

**கரிகாலன் என்பதற்குக் கருகிய காலை உடையவன் என்பது பொருள்.**

**சிறுவயதில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக இப்பெயர் இவருக்கு வந்தது.**

29. தோட்டத்தின் நடுவே ராஜா போல் நின்றவர் யார்?

**தோட்டத்தின் நடுவே ராஜா போல் நின்றவர் காவல்காரர்.(சோளக் கொல்லை பொம்மை.)**

30. சொல்லில் விளையாடச் சொல்லித் தந்தவள் யார்?I.III.

**சொல்லில் விளையாடச் சொல்லித் தந்தவள் தமிழ் அன்னை.**

**III. பின்வரும் படத்தைப் பற்றி ஐந்து வரிகள் எழுதுக.** (5)

31. 

**IV. பத்தியைப் படித்து விடையளி:** (10)

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப்பொங்கல். மாடுகள் உழவர்களின் செல்வமாக மதிக்கப்படுகின்றன. மாடு என்ற சொல்லுக்குச் செல்வம் என்னும் பொருளும் உண்டு. உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக மாடுகள் விளங்குகின்றன. அவற்றிற்கு நன்றி செலுத்தும் வகையில் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. மாட்டுப் பொங்கல் நாளிலோ அதற்கு அடுத்த நாளிலோ சில ஊர்களில் மஞ்சுவிரட்டு நடைபெறும். மஞ்சுவிரட்டு என்பது மாடுகளை அடக்கித் தழுவும் வீர விளையாட்டு ஆகும்.

**வினாக்கள்** :

32. பொங்கலுக்கு அடுத்த நாள் **மாட்டுப்பொங்கல்**

33. மாடுகளை அடக்கித் தழுவும் வீர விளையாட்டு **மஞ்சுவிரட்டு**

34. மாடு என்ற சொல்லுக்குச் **செல்வம்** என்னும் பொருளும் உண்டு.

35. உழவுக்கும் உழவருக்கும் உற்ற துணையாக **மாடுகள்** விளங்குகின்றன.

36. மாடுகள் உழவர்களின் **செல்வமாக** மதிக்கப்படுகின்றன.

**V. பின்வரும் பத்தியைப் படித்து விடையளி:**

தமிழ்நாட்டில் உள்ள பழைமையான நகரங்களுள் ஒன்று சேலம். முக்கனிகளில் ஒன்றான மாம்பழத்திற்குப் புகழ் பெற்றது.அங்கு நடைபெற்ற பொருட்காட்சிக்கு கலாவும்,மாலாவும் சென்றனர். அங்கு உலகப் புகழ் பெற்ற தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகளைப் பார்த்து மகிழ்ந்தனர். அடுத்து மரப்பொம்மைகள் உள்ள பகுதிக்குச் சென்று மரத்தாலான நாய்பொம்மைகள், யானை பொம்மைகள், மரப்பாச்சிகள் போன்றவற்றை வாங்கினர். அங்கு நெகிழியால் செய்யப்பட்டிருந்த வண்ண வண்ண பொம்மைகள் அரங்கிற்கே அழகு சேர்த்தன.

**வினாக்கள்:**

37. தமிழ்நாட்டில் உள்ள பழைமையான நகரங்களுள் ஒன்று **சேலம்**

38. பொருட்காட்சிக்குச் சென்றவர்கள் யார் யார்? **கலாவும்,மாலாவும்**

39. அரங்கிற்கே அழகு சேர்த்தவை எவை? **வண்ண வண்ண பொம்மைகள்**

40. உலகப் புகழ் பெற்ற பொம்மைகள் **தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள்**

41. மரத்தாலான பொம்மைகளுள் ஒன்று **மரப்பாச்சிகள்**

**VI. படம் பார்த்து பொருள் அறிந்து பெயர் எழுதுக.** (5)

42.  மாண் / **மான்**

43.  அளை / **அலை**

44.  **ஒலி** / ஒளி

45.  பலம் / **பழம்**

46.  பனம் / **பணம்**